# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 072/மா/2019
ஆணை நாள்: 8.7.2019

22.04.2019 நாளிட்ட
தி ஹிந்து நாளிதழ் செய்தி. – தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் - 13,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 13 ல் உள்ள வேளச்சேரி குடியிருப்புப் பகுதிகளில் குப்பைகள் மற்றும் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதாகவும், மாநகராட்சியால் பல நாட்களாக மேற்படி குப்பைகள் மற்றும் கழிவுகள் அகற்றப்படாமல் இருந்து வருகிறதென்றும், இதனால் அப்பகுதி மக்கள் மிக்க சிரமத்திற்குள்ளாவதாகவும், பலமுறை மாநகராட்சிக்கு புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் தெரிவிப்பதாக 22.04.2019 நாளிட்ட தி ஹிந்து நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இச்செய்தியினை இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாகப்பதிவு செய்து, முறையீட்டு மனு எண். 072/மா/2019 என எண்ணிடப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 13, வேளச்சேரி குடியிருப்புப் பகுதிகளில் குப்பைகள் மற்றும் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதாகவும், மாநகராட்சியால் பல நாட்களாக மேற்படி குப்பைகள் மற்றும் கழிவுகள் அகற்றப்படாமல் இருந்து வருகிறதென்றும், இதனால் அப்பகுதிவாழ் மக்கள் மிக்க சிரமத்திற்குள்ளாவதாகவும், பலமுறை மாநகராட்சிக்கு புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் தெரிவிப்பதாக 22.04.2019 நாளிட்ட "தி ஹிந்து" நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தின் 2.5.2019 நாளிட்ட அறிவிப்பாணையில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள நாளிதழில் வெளியான செய்தி குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் 13வது மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 13வது மண்டல அலுவலர், தனது 10.06.2019 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் வேளச்சேரி பகுதியில் புவனேஸ்வரி நகர், வி.ஜி.பி செல்வா நகர் , பேபி நகர், டான்சி நகர் மற்றும் சாரதி நகர் விரிவு ஆகிய பகுதிகளில் குப்பைகள் அகற்றப்படவில்லை என்பது தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் அறிவிப்பாணையின்படி கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். கோட்டம் 179 ல் குப்பைகளை அகற்றும் பணி மேற்கொள்ள ராம்கி என்ற தனியார் நிறுவனம் மூலம் ஒரு காம்பேக்டர் லாரியும், (காலை, மதியம், இரவு), 28 மூன்று சக்கர வாகனமும், 25 நபர்கள் சாலை சுத்தம் செய்பவர்களும், 28 நபர்கள் வீடுவாரியாக குப்பைகளை வழங்குவதற்கும் என பிரித்து குப்பைகளை அகற்றும் பணி செய்யப்பட்டு வருகிறது என்றும், 23.05.2019 அன்று லாரி பழுதடைந்த காரணத்தால் மேற்கண்ட பகுதிகளில் குப்பைகளை அகற்றும் பணியில் சற்று தொய்வு காணப்பட்டது என்றும், இப்பகுதியில் உடனே மாற்று வாகனம் ஏற்பாடு செய்து அன்றைய தினமே ராம்கி நிறுவனம் அனைத்து குப்பைகளையும் அகற்றியுள்ளது என தெரிவித்து தற்போதைய நிலையின் புகைப்படங்களை அனுப்பி வைத்துள்ளார். மேலும் இனிவரும் காலங்களில் இதுபோல் நிகழாவண்ணம் கண்காணிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் நாளிதழில் தெரிவிக்கப்பட்டிருந்த புகார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் 13வது மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு, மண்டல அலுவலரின் அறிக்கை ஏற்கப்பட்டது. இனி இம்மாதரியான நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் 13வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி இப்பொருட்பால் தொடர் நடவடிக்கையினை கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொ).

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 13,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரி